# தடைகளை அகற்றுவதற்கு பொலிசாருக்கு அதிகாரமுண்டு

Registered as a Newspaper in Ceylon * ★ [illegible] 10

# ஈழநாடு

EELANADU

மலர் 10
[illegible] எண். 49 இதழ் 171
[illegible] 299 National Tamil Daily தேசிய தினசரி

யாழ்ப்பாணம் [illegible] ஆடி 16 ஜூலை 5 புதன்கிழமை (31-7-6?)

## அட்டோர்னி ஜெனரல்

### பிரதமரிடம் தெரிவித்த கருத்து

கொழும்பு, செவ். சமூக ஏற்றத் தாழ்வு ஒழிப்புச் சட்ட விதிகளின் படி ஆலயங்களில் போடப்படும் தடைகளை அகற்றுவதற்கும், வழிபடச் செல்லும் பக்தர்கள் யாராக இருந்தாலும் அவர்களைத் தடுப்பவர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுத்து அப்புறப்படுத்தவும் பொலிசாருக்கு அதிகாரம் உண்டு. சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவருவது சம்பந்தமாக பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவிடம் அட்டோர்னி ஜெனரல் திரு. அமீர் மேற்கண்டவாறு கூறியதாகத் தெரியவருகிறது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் நடந்த சம்பவங்கள் சம்பந்தமாக நடந்த முழு விபரங்களையும் வடமாகாண பொலிஸ் அதிபர்

(6ம் பக்கம் பார்க்க)

புதிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு

# விவசாயம், கைத்தொழில், கல்விக்கு கூடுதல் நிதி

## உத்தேசவருமானம் ரூ. 232 கோடி
## செலவு ரூ. 337 கோடி 77 லட்சம்

### இராமநாதன் பல்கலைக்கழகத்துக்கு இம்முறையும் அடையாள மான்யம்

கொழும்பு, செவ்வாய்

**இலங்கையின் சரித்திரத்திலேயே வருமானத்தை விட மிக அதிகமான தொகை செலவிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள புதிய நிதிஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட உத்தேச மதிப்பீட்டை நிதி அமைச்சர் திரு. யு. பி. வன்னிநாயக்கா இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பித்தார்.**

அடுத்த அக்டோபர் மாதத்திலிருந்து ஆரம்பமாகும் புதிய நிதிஆண்டில் அரசாங்கம் எதிர்பார்க்கும் வருமானம் 232 கோடி 7 லட்சம் ரூபாய். அந்தவருடத்தில் அரசாங்கம் செலவிட உத்தேசித்திருக்கும் தொகை 337 கோடி 77 லட்சம் ரூபாயாகும். வருமானத்தைவிட செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ள தொகை 105 கோடியே 69 லட்சம் ரூபாயாகும். அதாவது இந்த மதிப்பீட்டில் துண்டுவிழும் தொகை 105 கோடியே 69 லட்சம் ரூபாயாகும்.

அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டத்தின்மூலம் 36 கோடி ரூபா கிடைக்குமென்று நிதிஅமைச்சர் எதிர்பார்க்கிறார். இது தவிர கலால்வரிகள் மூலம் நடப்பு நிதிஆண்டில் ரூ.43 கோடி 47 லட்சம் எதிர்பார்க்கப்பட்டது. புதியநிதி ஆண்டில் கலால் வருமானம் மூலம் இத்தொகை 45 கோடி பத்து லட்சம் ரூபாயாக அதிகரிக்குமென நிதி அமைச்சர் எதிர்பார்க்கிறார். இவை போக துண்டுவிழும் மிகுதித்தொகையை எப்படிச் சரிக்கட்டுவதென நிதியமைச்சர் உத்தேசித்துள்ளாரென்பதை நாளை மறுதினம் அவர் நிகழ்த்தவிருக்கும் வரவுசெலவுத் திட்ட உரையில் வெளியிடுவார்.

சென்ற சிலவருடங்களில் போலவே யாழ்ப்பாணத்தில் இராமநாதன் பல்கலைக்கழகம் அமைப்பதற்கென வரவு—செலவுத்திட்ட மதிப்பீட்டில் பத்துரூபாய் அடையாள மான்யம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## தேசிய வாலிபர் சபைக்கு ஒரு கோடி ஒதுக்கீடு

சகல அமைச்சுகளின் செலவினங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன. விவசாயத்துக்கென இம்முறை மிகக் கூடுதலான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. நடப்பு நிதியாண்டில் விவசாயத்துக்கு 38 கோடியே 40 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. அடுத்த நிதியாண்டில் 50 கோடியே 40 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. காணி நீர்ப்பாசன அமைச்சுக்கு நடப்பு நிதிஆண்டில் 38 கோடியே 30 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. அடுத்த நிதி ஆண்டில் இத்தொகை 42 கோடியே 20 லட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கல்விக்கென நடப்பு நிதியாண்டில் ஒதுக்கப்பட்ட தொகையை விட அடுத்த நிதி ஆண்டில் நான்கு கோடி ரூபாய் அதிகம் ஒதுக்கப் பட்டுள்ளது. சுகாதாரத்திற்கு மூன்று கோடி ரூபாயும் கைத்தொழில் கடற்றொழிலுக்கென நான்கு கோடி எழுபது லட்சம் ரூபாயும் புதிய நிதி ஆண்டில் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது.

உணவுக்கமிட்டிக்கென 33 கோடி 40 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பிரதம மந்திரியின் இலாகாவின் கீழுள்ள செலவின வகையில் தேசிய வாலிபர் சபை அமைப்பதற்கென ஒரு கோடிரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

## நீர்வேலியில் மோசடி செய்ததாக வழக்கு

### எதிரிகளுக்கு அபராதம்

யாழ்ப்பாணம், புதன். நீர்வேலியில் மோசடிசெய்ததாக குற்றஞ்சாட்டி எட்டு வியாபாரிகள் மீது தொடரப்பட்ட வழக்கில் யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ஜமீல் விசாரணை செய்த பின் எதிரிகளுக்கு அபராதம் விதித்தார்.

யாழ்ப்பாண நகரத்தில் உள்ள இந்த 8 வியாபாரிகளில், மூவர் இறைச்சிக் கடைக்காரர்கள்; இரண்டு பேர் பலசரக்கு கடைக்காரர்; ஒருவர் கருவாட்டுக் கடைக்காரர்; ஒருவர் மரக்கறிக்கடைக்காரர்; ஒரு கூட்டுறவு சங்கத்தவர்.

எதிரிகளான வியாபாரிகளுக்கு, 25 ரூபா முதல் 50 ரூபா வரை அபராதம் விதிக்கப்பட்டது. 6 பேருக்கு [illegible] விதிக்கப்பட்டது.

## உள்ளூராட்சி சேவை கமிஷன் மசோதா

### பிரதிநிதிகள் சபையில் தாக்கல்

கொழும்பு, செவ். அரசாங்க சேவைக் கமிஷன் போன்று உள்ளூராட்சி சேவைக் கமிஷனை நியமிக்கப்படுவதற்கு வகை செய்யும் மசோதா மக்கள் பிரதிநிதிகள் சபையில் இன்று சமர்ப்பிக்கப்பட்டது.

மூன்றுவருடத்துக்கு பதவியிலிருக்க அருகதையுள்ள உள்ளூராட்சி சேவைக் கமிஷன் அங்கத்தவர்களை உள்ளூராட்சி அமைச்சரே நியமிப்பார்.

உள்ளூராட்சி சேவைக்கு உத்தியோகத்தர்களை நியமிப்பது, இடமாற்றம் செய்வது, வேலைநீக்கம் செய்வது போன்ற சகல அதிகாரங்களும் இக்கமிஷனிடமிருக்கும். இக்கமிஷன் உள்ளூராட்சி அமைச்சரின் உத்தரவை நிறைவேற்றும்.

உள்ளூராட்சி சேவை ஊழியர்களின் சம்பள விகிதங்களையும் இக்கமிஷன் நிர்ணயிக்கும்.

### புதிய சம்பள விகிதம்

உள்ளூராட்சி சேவை ஊழியர்களின் சம்பள முரண்பாடு நீக்கப்பட்டு புதிய சம்பள விகிதம் 1967-ம் ஆண்டு ஜூலை முதல் திகதியிலிருந்து வழங்குவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சேவை சிறுப்பான்கள், குமாஸ்தாக்கள், நிர்வாக அதிகாரிகள், கிராமசபைக் காரியதரிசிகள், நிர்வாக உதவியாளர்கள், முதலியோர் இப்புதிய சம்பளத்திட்டத்திலடங்குவர்.

## அதிபர்களும் கட்டாயமாக கல்விபோதிக்கவேண்டும்

கொழும்பு, செவ். பாடசாலை அதிபர்களும், உபஅதிபர்களும் இனி கட்டாயமாக மாணவர்களுக்குக் கல்வி போதனை அளிக்க வேண்டும்.

கல்விமா அதிகாரி பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கை கொன்றில் இவ்வாறு உத்தரவிட்டுள்ளது.

அதிபர்கள் வாரத்துக்கு 8 மணிநேரமும், உபஅதிபர்கள் வாரத்துக்கு 10 மணி நேரமும் கல்வி போதனை அளிக்கவேண்டுமென கல்விமா அதிகாரியின் சுற்றறிக்கை தெரிவிக்கிறது.

முன்னர் அதிபர்களும், உபஅதிபர்களும் பாடசாலை நிர்வாக வேலைகளை மட்டுமே கவனிக்க அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

## விபத்தில் ஒருவர் பலி

நல்லூர், புதன். மதவாச்சியில் நேற்று ஏற்பட்ட ரக் விபத்தில் ஒருவர் ஸ்தலத்தில் மாண்டார். ரக் சாரதி படுகாயமடைந்தார். மரங்கள் ஏற்றிவந்த இந்த ராணுவ ரக்கிலிருந்து மற்றும் 8 பேர் காயமடைந்தனர். இவர்கள் உடனடியாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

## மருந்து தட்டுப்பாடு

சுழிபுரம், திங். தொல்புரம் பாளுவெட்டி அரசினர் வைத்தியசாலையில் மருந்துக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வைத்தியசாலை திறக்கும்போது கொடுக்கப்பட்ட மருந்து வகைகளே இதுவரையும் பயன் படுத்தப்பட்டது எனவும் தொடர்ந்து வரும் நோயாளிகளுக்கு மருந்து கொடுக்க முடியாத நிலைமையிலுள்ளதாகவும் அறியப்படுகிறது. இவ்விஷயமாக வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கத்திடம் பொதுமக்கள் முறையிட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத்-செக். தலைவர்கள் கருத்துப் பரிமாறல்

பிராக், ஜூலை 30

**சோவியத் தலைவர்களுக்கும், செக்கோஸ்லாவாக்கியத் தலைவர்களுக்குமிடையே, செக்.-உக்ரெயின் எல்லையிலுள்ள சியென் என்னும் இடத்தில் நேற்று ஆரம்பமாகிய பேச்சுவார்த்தைகள் நேற்றுப் பின்னிரவுவரை நீடித்தன.**

**இப்பேச்சுவார்த்தைகளின்போது, இருசாராரும் தத்தம் நிலைபற்றிய கருத்துப்பரிமாறல் செய்துகொண்டதாகக் கூறப்படுகிறது.**

## பத்திரிகைக்கட்டுப்பாட்டு யோசனையை செக். நிராகரிப்பு

பேச்சுவார்த்தைகள் எத்தகைய சூழ்நிலையில் நடைபெற்றன என்பது பற்றி எதுவும் அறிவிக்கப்படவில்லை. சிநேகபூர்வமான, சுமுக சூழ்நிலை நிலவியதாகத் தெரியவில்லை என்று சில வட்டாரங்கள் தெரிவித்தன.

சோவியத் தூதுகோஷ்டியில் 13 பேர் உள்ளனர். இவர்களில் 9 பேர் சோவியத் 'பொலிட்பியூரோ' சபையைச் சேர்ந்தவர்கள். ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சிக் காரியதரிசி திரு. பிரெஷ்னெவ், ரஷ்ய தூதுகோஷ்டிக்குத் தலைமை தாங்குகிறார். அதிஉயர் மட்டத்திலான செக். தூதுகோஷ்டியில் செக். அதிபர் திரு. சுவபோடாவும், 'பிரெசிடியம்' என அழைக்கப்படும் முழு ஆட்சிச் சபையினரும் அடங்கியுள்ளனர்.

**சோவியத் தலைவர்கள் சமரச நிலை?**

பேச்சுவார்த்தைகளின் போது, சோவியத் தலைவர்கள் சமரச நிலையை மேற்கொண்டதாகச் சொல்லப்படுகிறது. செக்கோஸ்லாவாக்கியத் தலைவர்கள் அந்நாட்டுப் பத்திரிகைகள் மீது சில கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டுமென்ற கோரிக்கையையே சோவியத் கோஷ்டி முன்வைத்ததாகவும் கூறப்படுகிறது ஆனால், இந்தக் கோரிக்கைக்குச் செக். தலைவர் உடன்படவில்லை எனத் தெரிகிறது.

முன்னதாக செக்கோஸ்லாவாக்கிய டெலிவிஷன் காட்சியில் இரு நாட்டுத் தலைவர்களும் சந்திப்பதற்குச் செல்லும் வழியைச் செக். மக்கள் கண்டனர்.

பேச்சுவார்த்தைகள் நடைபெறும் இடம், இருநாட்டுப் பாதுகாப்புப்படைகளாலும் இறுக்கமாகக் காவல்புரியப்பட்டு வருகிறது.

## நைஜீரிய பிரச்னை

லண்டன், ஜூலை 30

நைஜீரிய உள்நாட்டுப் போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கத்துடன், கிழக்கு நைஜீரியாவான 'பியாவ்ரா' 9 அம்சத் திட்டமொன்றைத் தயாரித்துள்ளதாக, 'பியாவ்ரா' பிரதிநிதி ஒருவர் லண்டனில் கூறியுள்ளார்.

இந்த 9 அம்சத் திட்டம், அடுத்த வாரம் எதியோப்பியத் தலைநகரில் ஆரம்பமாகும் நைஜீரிய சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கிழக்கு நைஜீரியாவான 'பியாவ்ரா'வில் பட்டினியால் தவிக்கும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு, உணவு மற்றும் பொருட்களை விநியோகிப்பதென்பது தற்போதைய சூழ்நிலையில் முடியாத காரியமென்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்தது.

லகோஸிலிருந்து கிடைக்கும் செய்திகள், 'பியாவ்ரா'வில் பட்டினியால் அல்லலுறும் மக்களுக்கு நிவாரணம் அளிப்பதுபற்றிப் பேசுமுகமாக ஐ. நா. பிரதிநிதி ஒருவரை வரவேற்கச் சமஷ்டி நைஜீரியா சம்மதம் தெரிவித்துள்ளதாகக் கூறுகின்றன.

## ரஷ்ய எல்லைகளில் இராணுவப்பயிற்சி விஸ்தரிப்பு

மாஸ்கோ, ஜூலை 30

இதற்கிடையில், சோவியத்-மேற்கத்திய எல்லையில் நடைபெற்றுவரும் சோவியத் ராணுவப் பயிற்சிகள், இப்போது போலாந்து, கிழக்கு ஜெர்மனி எல்லைகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

இந்த எல்லைப்புறப் போர் ஒத்திகைப் பயிற்சிகளில் போலாந்து, கிழக்கு ஜெர்மனித் துருப்புகளும் கலந்துகொண்டுள்ளதாகப் பயிற்சிகளுக்குத் தலைமைதாங்கும் சோவியத் தளபதி அறிவித்துள்ளார்.

பெர்லினிலிருந்துவரும் செய்திகள், கிழக்கு ஜெர்மனிக்குள்ளே பெருமளவில் துருப்புகள் நடமாட்டம் காணப்படுவதாகக் கூறுகின்றன.

## கிழக்கு ஜெர்மனியின் புதிய போக்குவரத்துத் தடைகள்

### மூன்று நாடுகள் ஆட்சேபம்; ரஷ்யா நிராகரித்தது

மாஸ்கோ, ஜூலை 30

கிழக்கு ஜெர்மனி-மேற்கு ஜெர்மனிக்கிடையேயான போக்குவரத்துச் சம்பந்தமாகக் கிழக்கு ஜெர்மனி விதித்திருந்த சட்டதிட்டங்களை ஆட்சேபித்து அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் அனுப்பிய ஆட்சேபக் குறிப்புகளுக்கு ரஷ்யா பதிலளித்துள்ளது. ஆட்சேபத்தை ஏற்றுக்கொள்ள முடியாதென ரஷ்யா தெரிவித்துள்ளது.

கிழக்கு ஜெர்மனியின் புதிய போக்குவரத்துச் சட்டதிட்டங்கள் சர்வதேச ஒழுங்கு முறைக்கு மாறானவை என்று அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய மூன்று வல்லரசுகளும் ரஷ்யாவுக்கு அனுப்பியிருந்த தமது ஆட்சேபக் குறிப்புகளில் தெரிவித்திருந்தன.

## ரொடீஷிய தடை உத்தரவு

### ஜோன்ஸன் கைச்சாத்து

வாஷிங்டன், ஜூலை 30

சட்டவிரோத ரொடீஷிய ஆட்சிக்கெதிராக விதிக்கப்பட்டுள்ள தடைகளடங்கிய உத்தரவுப் பத்திரத்தில், அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்ஸன் கைச்சாத்திட்டார்.

பல முக்கிய பொருட்களின் ஏற்றுமதி, இறக்குமதிகளை ரொடீஷியாவுடன் அமெரிக்கா செய்துகொள்வதை இந்த உத்தரவு தடைசெய்கிறது.

## பாகிஸ்தானுக்கு ரஷ்ய உதவி

மாஸ்கோ, ஜூலை 30

ரஷ்யாவுக்கும், பாகிஸ்தானுக்குமிடையே கைச்சாத்தாகியுள்ள ஓர் உடன்படிக்கையின்படி, 6 கோடி 70 லட்சம் டொலர் பெறுமதியான இயந்திரங்கள், உபகரணங்களை ரஷ்யா பாகிஸ்தானுக்கு வழங்கும்.

## விமானக் கடத்தல்

# அரபு தேசியவாதிகளுக்கு இஸ்ரேல் பிரதமர் எச்சரிக்கை

டெல்அவிவ், ஜூலை 30

அல்ஜீரியாவுக்கு இஸ்ரேலிய விமானமொன்றை கடத்திச் சென்றதன் மூலம், அரபு தேசியவாதிகள் பாரதூரமான விளைவுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்று இஸ்ரேல் பிரதமர் திரு. எஷ்கோல் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

விமானக்கடத்தல் சம்பவத்தைப் பற்றி விவாதிப்பதற்கென ஐ. நா. பாதுகாப்புச் சபையின் விசேஷ கூட்டமொன்றை அழைப்பதற்கு ஐ. நா.விலுள்ள இஸ்ரேல் பிரதிநிதி முயற்சி எடுத்துவருகிறார் எனத் தெரிகிறது.

இதற்கிடையில், சர்வதேச விமானிகள் சங்கத்தின் இரு பிரதிநிதிகள் அல்ஜீரியாவில் பிடித்துவைத்திருக்கும் இஸ்ரேலிய விமானிகளை விடுவிக்கும் முயற்சியில் அல்ஜியர்ஸ் சென்று, அல்ஜியர்ஸ் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துகின்றனர்.

விமானக்கடத்தல் சம்பவம் குறித்து என்ன நடவடிக்கைஎடுக்க வேண்டுமென்பது குறித்துச் சர்வதேச விமானிகள் சங்கம் லண்டனில் கூடித் தீர்மானிக்க விருப்பதாகத் தெரியவருகிறது.

## அம்புலன்ஸ் இல்லை

புலோலி, செவ்வாய்

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் இதுவரை சேவையில் ஈடுபட்டுவந்த அம்புலன்ஸ் வண்டி பழுதடைந்துள்ளதால் அவசர சிகிச்சைக்குரியவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். யாழ்ப்பாண அரசினர் ஆஸ்பத்திரி அம்புலன்ஸ் வண்டியே இங்கு சேவைக்கு வர வேண்டியுள்ளதாம்.

## 'முதல் எழுத்து இடப்படவேண்டும்'

புலோலி, செவ்வாய்

உணவுஉற்பத்திச் சட்டத்தின் கீழ் சகல மாடுகளுக்கும் அவற்றின் சொந்தக்காரர்கள் முதலெழுத்துடன் இலக்கமும் குறிசுடப்படவேண்டுமென்று இங்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி உணவுப்பயிர்களை நாசமாக்கும் மாடுகளின் சொந்தக்காரர்களைக் கண்டுபிடிப்பது சுலபமாக இருக்கும் என்பதே இதன் நோக்கம் எனத் தெரிகிறது

## ஆலயப்பிரவேசம்: 5-ந் திகதி கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக அடுத்து எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றி ஆராய தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் பொதுக் கூட்டம் யாழ்ப்பாண நகரமண்டபத்தில் ஆகஸ்ட் மாதம் 5 ம் திகதி நடைபெறவிருக்கிறது.

## டாக்டர் எஸ். வி. ஜயராஜா

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் காது, மூக்கு, தொண்டை, சத்திர சிகிச்சை நிபுணராகவும், மானிப்பாய் கிறீன் ஞாபகஆஸ்பத்திரியில் இருந்தவருமான டாக்டர் எஸ். வி. ஜயராஜா, இப்போது அப்பதவியை விட்டு யாழ்ப்பாணம் மானிப்பாய் ரஸ்தாவில் தனியாக வைத்திய சேவை புரிகிறார்.

# கர்ப்பத்தடையை தடை செய்யும் பாப்பரசர் சுற்றறிக்கை

## உலகநாடுகளில் பலவகைப்பட்ட கருத்து

வத்திக்கான், ஜூலை 30

கர்ப்பத்தடையைத் தடைசெய்யும் ரோமன் கத்தோலிக்கத் தேவாலயக் கட்டளையைப் பாப்பரசர், நேற்று வெளியிட்டுள்ள சுற்றறிக்கை ஒன்றின் மூலம் உறுதிப்படுத்தியுள்ளார்.

அவர் இவ்விதம் செய்திருப்பது, உலகெங்கிலுமுள்ள நாடுகளில் முரண்பட்ட கருத்துநிலைகளைத் தோற்றுவித்துள்ளன.

பிரிட்டனில், பாப்பரசரின் கட்டளை, வெவ்வேறு தேவாலயங்களுக்கிடையே மாறுபட்ட கருத்துக்களுக்கு வழிவகுத்திருக்கிறதென்றும், தேவாலயங்களுக்கிடையேயான தொடர்புகளுக்கு இது ஓர் அடியாகும் என்றும் மத அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவில் ஒரு மதகுரு இது பற்றிக் குறிப்பிடுகையில், அநேகமான தம்பதிகள் குடும்பக்கட்டுப்பாட்டை அனுசரித்துவருவதாகக் கூறினார்.

பிரெஞ்சு மத வட்டாரங்களில், மதத்தாராளக் கொள்கை மீது பாப்பரசர் கட்டளை ஒரு தடையாக விளங்குமென்ற கருத்து வெளியிடப்பட்டது. ஸ்பெயினில் பாப்பரசரின் உத்தரவுக்கு வரவேற்புக் கிடைத்துள்ளது. அயர்லாந்திலும், பாப்பரசருக்கு முழு ஆதரவு வெளியிடப்பட்டிருக்கிறது.

பெல்ஜியத்தில், மதகுரு ஒருவர், பாப்பரசரின் சுற்றறிக்கை சாதாரண மொழியில் உருவாக்கப்படவில்லையென்று குறிப்பிட்டார். சாதாரண மனிதர் விளங்குவதற்கு இயலாத உயர் தார்மீகத் தத்துவங்கள் அதில் அடங்கியிருப்பதாகவும் அவர் கூறினார்.

கனடாவில் பாப்பரசர் இவ்விதம் கர்ப்பத்தடை மீது தடை விதிக்கும் உத்தரவை வெளியிட்டதில் காட்டியுள்ள துணிச்சல் பற்றிப் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

## சமய சாஸ்திரங்கள் கற்பிக்கப்படும்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் கந்தர்மடம் சிவகுருநாதபீடத்தில் திரு. சி. மார்க்கண்டுவால் சமயசாஸ்திரங்கள் பயிற்றுவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இவர் ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளின் மாணவரும், கலாநிதி வ. பொன்னையாவிடம் சமயசாஸ்திரங்கள் பயின்றவருமாவார். வைகாசி மாண்டூக்ய உபநிஷதம், வேதாந்த நூல்கள் ஆகியன கற்பிக்க குருபீடம் ஒழுங்கு செய்துள்ளது.

## நற்கருணைத்திருநாளும் அன்னாள் திருநாளும்

பண்டத்தரிப்பு, செவ்.

இளவாலை சென். ஜேம்ஸ் பங்கில் வருடாந்த நற்கருணைத் திருநாள் உற்சவம் வழமைபோல் கொண்டாடப்பட்டது. அலங்கரிக்கப்பட்ட இரதமவீதியூடே நற்கருணைநாதர் பவனி வந்ததும் ஆலயத்தில் நற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டது. இளவாலை புனித அன்னாள் திருநாள் இம்மாதம் 26-ந் திகதியும், வலித்தூண்டல் புனித அன்னாள் திருநாள் 28-ந் திகதியும் கொண்டாடப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இனிய மணிகளே!

நிறைய நிறைய உங்களிடமிருந்து விஷயங்கள் மலருக்கு வந்து குவிந்து கொண்டிருந்தாலும், பலர் அவை பிரசுரத்துக்கு ஏற்றவையாக இருக்க வேண்டுமென்பதை மனதில் கொள்ள மறந்து விடுகிறீர்களே!

சிலர் கதைகளைப் பக்கம் பக்கமாக எழுதுகிறீர்கள்; சிலர் மாணவர்களுக்கு ஏற்ற விஷயங்களை எழுதாமல் ஏதேதோவெல்லாம் எழுதுகிறீர்கள்; சிலருடைய விஷயங்கள் தெளிவாக இல்லை. இப்படியே சொல்லிக் கொண்டு போகலாம்.

நீங்கள் மலருக்கு அனுப்பி வைக்கும் விஷயங்கள் தெளிவாக, சுருக்கமாக, மலருக்கு ஏற்ற விதத்தில் விஞ்ஞானம், கவிதை, வைத்தியம், குட்டிக்கதை, துணுக்குகள் போன்றவைகளாக இருக்க வேண்டும். புல்ஸ்காப் தாளில் ஒரு பக்கத்துக்கு மேற்படாமல் உங்கள் விஷயதானம் அமைய வேண்டும்.

மாணவர் மலரின் வேண்டுகோளை ஏற்ற ஒரு கட்டுப்பாட்டைத் தளர்த்தியிருக்கிறோம். விண்ணப்பப் பத்திரங்களை பூர்த்திசெய்து அனுப்பி, 'மாணவர் மலர்' அங்கத்தவர்களாக தம்மைப் பதிவு செய்து கொண்டவர்கள்தான் மலரில் எழுதலாம் என்ற நிபந்தனை இனி இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட "மாணவர் மலர்" வாசகர்கள் அனைவரும் நமது அங்கத்தவர்களே! இனி நீங்களெல்லாம் 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட, பள்ளியில் படிக்கும் மாணவர்களாக இருந்தால் மலருக்கு எழுதலாம்; மலர் நடாத்தும் பரிசுப் போட்டிகளில் பங்குபற்றலாம். மகிழ்ச்சிதானே!

அடுத்த வாரம் உங்களுக்கு பரிசுப் போட்டி—3 காத்து நிற்கிறது. அடுத்த போதாவுக்கு முதல் நாள் சந்திப்போமா?

—மாமா

## புதுமைத் திருவிழா!

நாளை எங்கள் கோவிலில்
நல்லதொரு திருவிழா
ஏழை இன்பம்காணுகின்ற
ஏற்றமான எழில்விழா!

ஆள் மயங்கும் சப்பரம்
ஆங்கில்லாத திருவிழா
வாழை வாகை காட்டிடாத
வரவழைக்கும் பெருவிழா?

பந்தல் வளமளித்திடும்
வாங்கு மிக்க திருவிழா
சிந்தை கவரும் மாமரம்
சிறந்திருக்கும் பெருவிழா!

ஆடுவோரும் பாடுவோரும்
ஆங்கில்லாத திருவிழா
வாடுவோரும்
தேடுவோரும்
வளமடையும் பெருவிழா!

நகையில்லாத
நங்கையார்கள்
நயந்து நிற்கும் திருவிழா
பகையிலாமை
மாற்றங்கூட்டும்
பணிந்துநிற்கும்
பெருவிழா!

— யோகன்

## அராலி கிராமசபை எல்லை விபரங்கள்

யாழ்ப்பாணம், புதன் அராலி கிராமசபையின் 7-ம், 8ம் வட்டார எல்லை விபரங்கள்:

**7-ம் வட்டாரம்**
[தூவை]

வடக்கு- வாவிக்கரையிலிருந்து கிழக்கு நோக்கி மயான ஒழுங்கை வரையும், அங்கிருந்து சொல்லப்பட்ட ஒழுங்கையின் மத்தியோரமாக அராலி கட்டுவன் வீதியைக் கடந்து சிவன்கோவில் ஒழுங்கை வரைக்கும், அங்கிருந்து மீண்டும் கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட சிவன் கோவில் ஒழுங்கையின் மத்தியோரமாகவும், 45ம் 46ம் இலக்க கிராமசேவகர் பிரிவுகளுக்கு எல்லையாக அமைந்திருக்கும் மேட்டு வரம்பின் மத்தியினூடாகவும் கமலங்கோடை வாய்க்காலின் மத்தியைச் சந்திக்கும் வரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

கிழக்கு- கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து தெற்கு நோக்கிப் பெரிய குளத்தைக் கடந்தும், வெளிக்குளம் வாய்க்காலின் மத்தியோரமாகவும், குழுவானை —இராவணை வீதியிலுள்ள மதவின் மத்தியைச் சந்திக்கும் வரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

தெற்கு- கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து மேற்கு நோக்கி குழுவானை — இராவணை வீதியின் மத்திய கோட்டின் ஓரமாக அராலி—கட்டுவன் வீதியைச் சந்திக்கும் வரைக்கும், அங்கிருந்து வடக்கு நோக்கிச் சொல்லப்பட்ட வீதியின் மத்தியோரமாக அதே வீதியிலுள்ள 11ம் மைல்கல்லைச் சந்திக்கும் வரைக்கும் அங்கிருந்து மேற்கு நோக்கிச் சொல்லப்பட்ட வீதியின் மத்தியிலிருந்து வரம்புகளின் ஊடாகவும், நெல் வயல்களினூடாகவும் கிராமப் பிரதேசத்தின் மேற்கோடி வரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

மேற்கு- அராலி மேற்கு வாவியினால்.

**8: வட்டாரம்**
[நொச்சியம்பதி]

கிராமசேவகர் பிரிவு இல. 45 வடக்கு- கிராமப் பிரதேசத்தின் மேற்கு அந்தத்திலிருந்து கிழக்கு நோக்கி 45ம் இலக்கக் கிராமசேவகர் பிரிவின் வட எல்லையோரமாக ஓடைக்காடு ஒழுங்கைச் சந்திவரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

கிழக்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து தெற்கு நோக்கி ஓடைக்காடு ஒழுங்கையின் மத்தியோரமாகவும், மயான ஒழுங்கையின் மத்தியோரமாகவும் 7 ம் வட்டாரத்தின் வட எல்லையைச் சந்திக்கும் வரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

தெற்கு- கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து மயான ஒழுங்கையின் மத்தியோரமாக அதன் மேற்கு அந்தத்துக்கு வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

மேற்கு- அராலி மேற்கு வாவியினால்.

அராலி கிராமசபையின் 9ம், 10ம் வட்டார எல்லை விபரங்கள் நாளை மறுதினம் வெளிவரும்.

## இன்றைய பலன்

(31 - 7 - 68)
ஆடி மீ 16 உ
புதன்கிழமை

திதி- ஷஷ்டி பகல் 1-27 மேல் ஸப்தமி.

நட்சத்திரம் —அஸ்தம் பகல் 8-04 மேல் சித்திரை.

ராகுகாலம் - 12-03-1-33.

சுபநேரம் - 4-33—6-03.

இன்று பிறந்தவர்களுக்கு — வாழ்க்கையில் படிப்படியான முன்னேற்றம் தென்படும். சிலர் வாதரோகத்தினால் பீடிக்கப்படுவர். உடன் பிறந்தவர் குறித்துக் கவலை ஏற்படலாம். தொழிலாளர்களுக்கு நிம்மதி பிறக்கும் நீண்ட பயணத்துக்கும் இட்டமிடுவீர்கள். ஆசிரியர்களாயின் அதிக செல்வாக்கு உண்டு இயல், இசை, நாடகத்துறையில் ஈடுபடுபவர்கள் மக்கள் ஆதரவைப் பெறுவர். அரசியல் வாதிகளுக்கு அதிர்ச்சி தரும் காலம். பொதுவாக சமயோசமான காலம்.

மேஷம்-கிரேகிதபீடை, இறையும் சேரும்.
ரிஷபம்- நீண்ட பயணம், நினைவுச் சுழல்.
மிதுனம்- உற்ருர் உறவு, உபயசெலவு.
கடகம்- முயற்சியால் உயர்ச்சி, தனமும் சேரும்.
சிம்மம்- குடும்பத்தில் சோர்வு, குருவால் நன்மை.
கன்னி- ஆமோதம் மனம் அற்ப இலாபம்.
துலாம்- குடும்பம் சிறக்கும், செல்வாக்கும் பெருகும்,
விருச்சிகம்- மோசடி நடக்கும், விழிப்புடன் இரு.
தனுசு- வாகனநலம், வாழ்விலும் திருப்பம்.
மகரம்- புத்தாடை அணிதல், புதிய எண்ணங்கள்.
கும்பம்- குடும்பத்தில் நிழலாட்டம், தபால் படிக்க நாள்.
மீனம்- விழிபால் வேமொழிபேசி விளையாட நன்று.

சோதிடக்கலாநிதி
திருமலை வேலுப்பிள்ளை

### வைத்தியம்

## வயிற்று நோய்களுக்கு கலைமானின் பால!

பால் ஒரு முக்கியமான உணவு என்பதை அனைவரும் அறிவர். இந்த நூற்றாண்டின் மத்தியில், 150 வகைப்பட்ட காட்டுமிருகங்கள், வீட்டு மிருகங்களின் பாலை நிபுணர்கள் ஆராய்ந்தனர்.

பல்வேறு வகைப்பட்ட மான்களில், குறிப்பாக கலைமான்களில், 10—20 சதவிகிதம் கொழுப்புச் சத்து இருப்பதாகவும். திமிங்கிலங்கள், டால்பின்கள் ஆகியவற்றில் 45 சதவிகிதம் கொழுப்புச்சத்து இருப்பதாகவும், நிபுணர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

"எல்லாண்டு" என்னும் ஆபிரிக்கக் கலைமான் 1892-ல் அஸ்கானி — யா — நோவா எனனும் உக்ரேனிய வளர்ப்புப் பண்ணைக்குக் கொண்டு வரப்பட்டது. இது ஆண்டு தோறும் 600 லிட்டர் பால் கொடுக்கிறது. இதன்பாலில் பசுவின்பாலைவிட 2 மடங்கு அல்புமின் சத்தும், பல மடங்கு கொழுப்புச் சத்தும் உள்ளது.

1963-ல் அஸ்கானியா — நோவாவிலுள்ள டாக்டர்கள் வயிற்றுநோய்களுக்கும், எக்ஸிமா போன்ற சரும நோய்களுக்கும் ஏனைய மருந்துகளோடு கலைமானின் பாலையும் கொடுத்தனர். இதன்விளைவா அந்நோய்கள் குணமாகிவிட்டன.

### குட்டிக்கதை

## புத்திவேண்டும்!

— நெல்லை'பேரன்.

முன்னொரு காலத்திலே அழகாபுரி என்னும் ஊரிலே குடிலன் என்றொரு வேடன் வசித்துவந்தான். இவன் தெய்வபக்தி நிரம்பியவன். இலக்குமியை வழிபடுபவன். ஒருநாள் இரவு இலக்குமி தேவி இவனது வீட்டிலே தோன்றி அங்கு காணப்படும் பொருட்கள், கற்கள் எல்லாவற்றையும் பொன்னுமாறும்படி செய்துவிட்டு மறைந்தாள்.

வேடன் படிப்பறிவு இல்லாதவன். எனவே பொன் கற்களின் மகிமை அவனுக்குத் தெரியவில்லை. வெளி முற்றத்தில் தான் சமையல் செய்யும்போது பொன் கற்களை வைத்து உலைமூட்டுவான்; அணில்களை எறிந்து விழுத்துவான்.

இதே அழகாபுரியில் சுப்பையா என்றவொரு செட்டியும் வசித்துவந்தான். இவன் மிகவும் புத்திசாலி! சுப்பையாச் செட்டி ஒரு முறை காட்டுவழியிலே வந்து கொண்டிருந்தபோது அங்கு குடிலன் பொன் கற்களை நிறையவைத்திருந்து அணில்களுக்குக் குறிவைத்து எறிவதைக் கண்டான்! வேடனின் அறிவீனத்தை ஒரு நொடியில் அறிந்துகொண்டான் அவன்! உடனே வேடனை அணுகி, "தம்பா! இந்தக் கற்களால் அணிலை எறிந்தால் அவை தப்பி ஓடிவிடும். ஏனெனில் இக்கற்கள் மிகவும் வெளிச்சமுள்ளவை. இந்த வெளிச்சம் அணில்களின் கண்களில்பட்டு அதனால் அவை எதிரியை உணர்ந்து தப்பி ஓடிவிடும். அணில் பிடிக்கக்கூட உபயோகமற்ற இக்கற்களை வைத்திருந்து என்ன பிரயோசனம்? என்னோடுவா ... நல்ல சக்திவாய்ந்த கற்களைத் தருகிறன்" என்று கூட்டிச்சென்றான். செட்டி தனது வீட்டில் வேடனுக்குப் பெரிய விருந்துவைத்துப் படுக்கவைத்தான், பின்னர் தனது வீட்டுக் காணியில் கிடந்த சாதாரண கற்களையெல்லாம் பொறுக்கி சாக்கில் நிரப்பிக் கட்டினான். வேடனிடம் அவற்றைக் கொடுத்துப் பதிலாக இன்னொரு சாக்கில் பொன் கற்களைப் பெற்றுக்கொண்டான். செட்டியின் ... ஒக்கோ அணிலின் ... பற்றவேடன் உள்ளவரை

அவன்வாழ்க்கை சுகமாகவே கழிந்தது.

வேடனுக்கு உதவி செய்த இலக்குமிதேவி இதைக் கண்டு சிரித்தாள். "புத்தியில்லாதவனுக்குப் பக்தியிருந்தும் என்ன பிரயோசனம்? பொன் கட்டிகளின் அருமை தெரியாமல் போனானே - என்று விசனப்பட்டாள். சரஸ்வதி தேவி வேடன்மீது கருணை காட்ட மறந்துவிட்டாள். புத்தியுள்ள செட்டியையே அவள் மிகவும் விரும்பினாள். இத ... பெற்றுக்கொண்டனர்.

## தம்பி!

- நவாலியூர்க் கவிராயர் -

சின்னஞ் சிறிய கைகள்
சிட்டுப் போன்ற கண்கள்
மின்னும் பட்டு மேனி
மினுங்கு மெங்கள் தம்பி!

வண்ண நல்ல புருவம்
வடிவமைந்த உருவம்
தண்டு போன்ற விரல்கள்
தங்க மெங்கள் தம்பி!

திக்கித் திக்கிக் கதைப்பான்
தினமு மவன் அழுவான்
பக்கம் நிற்கச் சொல்லி
பழி வெள்ளை வெள்ளை!

அம்மா வைவிட் டகலான்
அக்கா தூக்கி அ ணப்பாள்
சும்மா நானும் தூக்கி
சுமந் திறி வேனே!

கள்ளங் கபட மில்லான்
கனமு மென்னைப் பிரியான்
மெள்ள மெள்ளத் தவழும்
மன்ன னெங்கள் தம்பி.

## தெரிந்து கொள்ளுங்கள்

O எவ்வாண்டு இலங்கை முடிக்குரிய குடியரசானது?
—1802-ம் ஆண்டு.

O இலங்கையின் முதல் தேசாதிபதியின் பெயர் என்ன?
— பிரட்றிக் நோத்.

O உலகின் முதல் பெண் பிரதமமந்திரி யார்?
— திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா.

அனுப்பியவர்:
பொ. புஷ்பராணி.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**புதன் 31—7—68**

[செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

**344 மீற்றர் அல் 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வளை, 8-10 இசைவேளை, 8-15 இல்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் அல் 49 மீற்றர்**

பகல் 12-00 தொழிலாளர்வேளை, 1-00 மாதர்கேட்டவை.

**344 மீற்றர் அல் 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துகள், 5-30 ஓடிவிளையாடு பாப்பா.

இரவு 6-15 தேவர்திருப்பம், 6-45 வாளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 பாட்டு — கமலா பெரிய தம்பி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 வானொலி விசாரவிழா — அஞ்சல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

எமது தொழிற்சாலையில் கடமையாற்ற பெண் பிள்ளைகளும் சைக்கிள் விற்பனையாளர்களும் தேவை. தேவன்ஸ் இன்டஸ்றீஸ் 51, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 1277

### கல்வி

மெக்கானிக் பாடங்கள்!

செப்டம்பர் மாதம் ஆரம்பமாகவிருக்கும் எமது ஐந்தாவது மோட்டார் டிராக்டர் டீசல் முழுநேர பயிற்சி வகுப்புகளுக்கும் துரித சாரதிப் பயிற்சிகளுக்கும் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சேர விரும்புவோர் உடன் விண்ணப்பிக்கவும், அன்றி நேரில் தொடர்புகொள்ளவும். அதிபர், ஸ்ரீராஜ் ஓட்டோமொபைல் என்ஜினியரிங் நிறுவனம், மொக்சாக் மாளிகை மேல்மாடி. 11/A & 11/B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.* 1274

### விற்பனைக்கு

வீடு வளவு:

மண்டதீவு, கிழக்கு 1-ம் வட்டாரம் அம்மன்கோவில் கடற்கரை வீதி வடக்கு பக்கத்தில் ஏறாம் வடக்கு காரைநொச்சிவளவு 10 பரப்பும், வீடுகளும் நல்ல தண்ணீர்க் கிணறும், தென்னை, மா, வேம்பு ஆகிய வான் பயிர்களுடன் விற்பனைக்கு உண்டு. விபரம் தெரிய விரும்புவோர் கி. சிவசுப்பிரமணிய ஐயர், மறவன்புலோ, சாவகச்சேரி. 1278

தென் குத்தும் யந்திரம் ஆம்ஸ்ரோங் லிஸ்டர் (Armstrong lister 18. H. P.) யந்திரம் விசேட பிடைப்பு அருவி உள்பட மாவரைக்கும் யந்திரத்துடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு- செ. கந்தையா, முரசுமோட்டை, பரந்தன். 1280

## மயிலிட்டி துப்பாக்கிப் பிரயோகம்

### காயமடைந்தவர் எண்மர்

காங்கேசன்துறை, செவ்

நேற்று முன்தினம் மயிலிட்டியில் இருகோஷ்டியினருக்கிடையில் ஏற்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் எண்மர் காயமடைந்ததாக இப்போது தகவல் கிடைத்திருக்கிறது. வி. இரத்தினராசா, எஸ். அரிகிருஷ்ணன்) எஸ். மணிவாசகம் எஸ். அழகரத்தினம், எஸ். சுந்தரலிங்கம், கே. பரஞ்சோதி உட்பட இருபெண்கள் காயமடைந்தனர். இவர்கள் தற்பொழுது யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மயிலிட்டியில் தற்பொழுது இரவுபகல் பொலிசார் ரோந்துசுற்றிவருகின்றனர்.

## அமைச்சர் வந்தார்

குரும்பசிட்டி, செவ்வாய் உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் இன்று காலை விமானத்தில் பலாலியை வந்தடைந்த போது மயிலிட்டி கிராம சபைத்தலைவர் திரு. வ கிருஷ்ணசாமி, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். முருகவேல், யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. பி. தங்கவேலு ஆகியோர் அவரை வரவேற்றனர்.

## யாழ். மாநகரசபை

# கேள்வி அறிவித்தல்

கீழ் வரும் வேலைகளைச் செய்வதற்குப் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரரிடமிருந்து இரு பிரதிகளுடன் கூடிய அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. ஒவ்வொரு வேலைக்கும் படிவப் பெறுமதியாக ரூபா 5/-ம், கேள்வி வைப்புப்பணமாக ரூபா 25/-ம் 14-8-68 நண்பகல் 12-00 மணிக்கு முன் செலுத்தி படிவங்களைப் பெற்று 19-8-68 நண்பகல் 12-00 மணிக்கு முன் நேரிலோ அன்றேல் பதிவுத் தபால் மூலமாகவோ விண்ணப்பித்தல் வேண்டும்.

3. தபால் உறையின் இடது மூலையில் என்ன வேலைக்கு என்று குறிப்பிடப்படல் வேண்டும்.

4. குறைந்த கேள்விக்காரர் ஒப்பந்தம் செய்து கொண்டதும் கேள்வி வைப்புப்பணம் மாத்திரம் திருப்பி கொடுக்கப்படும்.

5. மேலும் விபரங்களை மாநகர மராமத்துப் பொறியியலாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

மாநகர மண்டபம்,
யாழ்ப்பாணம்,
28-7-68

(வே. தங்கவேலு),
பதில் ஆணையாளர்.

### வேலையின் விபரம்

1. துவிச்சக்கரவண்டிக் கொட்டில் பழுது பார்த்துப் புதுப்பித்தல்.

2. முத்திரைச்சந்தைக்கு முன்பாக மருத்திநீத்துறை வீதியில் கான் கட்டல்.

3. காமாட்சி அம்மாள் மடத்தைப் புதுப்பித்துப் பிரசவ விடுதியாக்கல்.

4. அரியாலை விளையாட்டு மைதான எல்லைச் சுவர் கட்டுதல். 906

சனசமூக நிலைய கரப்பந்தாட்டம்

## அரியாலை, பாஷையூர் வெற்றி

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணம் சனசமூக நிலையங்களிடையே நடாத்தப்பட்டு வரும் கரப்பந்தாட்டப் போட்டியில், அரசடி ஜனசக்தி சனசமூக நிலையமும், குருநகர் ரெக்கிளமேஷன் சனசமூக நிலையமும் கலந்து கொண்டன. முதல் போட்டியில் இரு கோஷ்டியினரும் மிக திறமையாக விளையாடினர். முதல் ஆட்டத்தில் குருநகர் ரெக்கிளமேஷன்கோஷ்டி 15—7 புள்ளிகளால் வென்றது. இரண்டாவது ஆட்டத்தில் அரசடிக் கோஷ்டியினர் திறமையாக விளையாடி 16—15 புள்ளிகளால் வென்றனர். மூன்றாவது போட்டியில் இருசாராரும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் விளையாடிய போதிலும், கடைசியில் குருநகர் ரெக்கிளமேஷன் கோஷ்டி 14—7 புள்ளிகளால் வென்றது.

இரண்டாவது நடை

(6-ம் பக்கம் பார்க்க)


# பல மடங்கு பயன் பெற பாவியுங்கள் திறீ றோஸஸ்




தரத்தை நாடும் புகை பிடிப்பாளர், வேறெதைக் கொடுத்தாலும் விட்டு மாற விரும்பாத சிறப்புகள் சில உண்டு. சுவை அவற்றில் ஒன்று — செறிந்த சுவை! நேர்த்தியான புகையிலைக் கலவை மற்றது. அதுவே உண்மையான திருப்தி தரும் புகைபிடி இன்பத்தை எப்போதும் அளிப்பது.

இந்தச் சிறப்பெல்லாம் சேர்ந்த ஒரே சிகரெட்தான் — திறீறோஸஸ்

அது இலங்கையின் அபிமான சிகரெட்டாகத் திகழக் காரணம் அதுவே!

தரத்தை நாடுவோர் அதை விடச் சிறப்புக் குறைந்ததை நாடாமலிருக்கக் காரணமும் அதுவே!

திறீ றோஸஸ் — மற்றிலும் சுவையான முழுத் திருப்தி தரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "25 ஆயிரம் ஏக்கர் நிலம் பயன்படுத்தப்படவில்லை"

## யாழ். மாவட்ட மேலதிக அதிபர் கவலை

வட்டுக்கோட்டை, செவ்.
உணவுப்பொருள் இறக்குமதிக்கு அரசாங்கம் 80 கோடி ரூபா செலவிடுவதாகவும், நம் நாட்டில் உணவுப் பொருட்களைப் பெருமளவில் உற்பத்தி செய்வதன் மூலம் மிச்சப்படுத்தும் பணத்தைக்கொண்டு குடிசைக் கைத்தொழிலை விருத்தி செய்யலாமென்றும் இதன் மூலம் வாலிபர்களிடையே வளர்ந்துவரும் வேலையில்லாப் பிரச்சினையை ஓரளவுக்குத் தீர்க்கலாமெனவும் வலி மேற்கு கிராம முன்னேற்றச்சங்கங்களின் கருத்தரங்கு 3-ம் நாள் நிகழ்ச்சிகளைக் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்துப் பேசிய யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், யாழ்ப்பாணக் குடாநாட்டில் 86,000 ஏக்கர் நிலத்தில் நெல் விளைவிக்கக்கூடிய வசதியிருந்தும் 60000 ஏக்கர் மட்டிலுமே நெற்செய்கை நடைபெறுகிறது.

இதிலும் ஏக்கர் ஒன்றில் 95—100 புசல் நெல் விளைவிக்கக் கூடியதாயிருக்கையில், நாம் 40 புசல் கூட விளைவிப்பதில்லை. விளைச்சலைக்கூட்டிக் கொள்ள புதிய ரசாயன உரங்களைப் பயன்படுத்த வேண்டுமென்றார்.

யாழ். மாவட்ட கி. மு. மேற்பார்வையாளர் திரு. வி. கே. சுப்பிரமணியம் பேசுகையில் தெரிவித்ததாவது:-

கிராம முன்னேற்றச்சங்கங்களின் பொதுக்கூட்டங்கள், நிர்வாக சபைக் கூட்டங்களின் ஆலோசனை பெறாமல் சில சங்கங்களின் தலைவர்கள் தமது இச்சைப்படி தாம் விரும்புகிறவர்களுக்கு அரசாங்க உதவி பெற்று கிணறுகள் தோண்டியும், மலசல கூடங்கள் கட்டியும் கட்டடங்கள் அமைத்தும் கொடுத்து வந்தார்கள். இனி அவ்விதம் செய்தவர்களிடம் செலவு செய்யப்பட்ட முழுப் பணத் தொகையையும் அரசாங்கம் அறவிட நடவடிக்கை எடுக்கும் என்றும் ஆகவே அரசாங்க நன்கொடைப் பணத்தைச் செலவு செய்யும் போது முறைப்படி தெரிவுசெய்யப்பட்ட நிர்வாக சபையின் அங்கீகாரம் பெற்றே செலவு செய்யவேண்டும்.

'கிராம அபிவிருத்தி இயக்கமும், சனசமூக நிலையங்களும் இப்போது ஓர் அமைச்சின் நிர்வாகத்தில் இருப்பதால் ஒரு கிராமத்திலுள்ள இரு சங்கங்களும் ஒன்று சேர்ந்து இயங்கலாம். அதன் மூலம் செலவினங்களைக் கட்டுப்படுத்தி சமயபாடவகுப்பு வளர்ந்தோர் கல்வி, இலவச பால் விநியோகம், வானொலி நிலையம், தையல் வகுப்பு, நெசவு போன்ற இன்னோரன்ன வேலைகளுக்கு அரசாங்கம் தரும் நன்கொடைகளை சிக்கனச்செலவு செய்து கூடிய பயனை அடையலாம்'

## வில்லுப்பாட்டு

யாழ்ப்பாணம், புதன்
மஹாகவியின் 'கண்மணியாள் கதை' வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை லடிஸ்வீரமணி குழுவினர் மீண்டும் யாழ்ப்பாணத்தில் நடத்தவிருக்கின்றனர். இன்று மாலை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலும், நாளை வல்வெட்டித்துறையிலும் 3-ந் திகதி பன்னாலை சேர் கனகசபை வித்தியாசாலையிலும் லடிஸ் குழுவினர் வில்லுப்பாட்டு நிகழ்த்துவர்.

## குருபூஜை

கோப்பாய், புதன்
கோப்பாய் இருபாலை சைவநெறி மன்றத்தினரால் நாளை சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை கொண்டாடப்படவிருக்கிறது.

## மகோற்சவம்

கோப்பாய், செவ்.
நீர்வேலி வாய்க்காற்றரவை விநாயகராலய வருடாந்த மகோற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.
எதிர்வரும் ஆகஸ்ட் 7-ந் திகதி புதன்கிழமை இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## அரியாலை,...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]
பெற்ற போட்டியில் அரியாலை சனசமூக நிலையமும், பாஷையூர் சனசமூக நிலையமும் கலந்து கொண்டன. பாஷையூர் கோஷ்டியின் முன்னணி வீரர்கள் மின்னல் வேகத்தில் அடிக்கும் பந்தை அரியாலை கோஷ்டியினரால் தடுக்க முடியவில்லை. ஆட்ட முடிவில் அரியாலைக் கோஷ்டியை பாஷையூர் கோஷ்டியினர் 14—1, 14—6 புள்ளிகளால் தோற்கடித்தனர்.
யாழ்ப்பாணம் சிங்கள மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இப்போட்டிகளுக்கு திரு. குமரையா மத்தியஸ்தம் வகித்தார். [தே. நி]


REGAL JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 P. M.
John Wayne &
Rita Hayworth
in
Circus World

MANOHARA
JAFFNA
Daily at 4-45, 7-00,
9-45 p. m.
Laurence Payne
in
THE TELL - TALE
HEART
[Adults Only]

2வது மாதம்!
ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெமினி — சரோஜாதேவி
நாகேஷ் — விஜயநிர்மலா
நடித்த
பணமா பாசமா

வின்ஸர்
தினசரி 3 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
பி. சரோஜாதேவி
நடித்த
அரச கட்டளை

3வது வாரம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
ரகுநாதன் - சந்திரகலா
தங்கவடிவேல்
நடித்த
நிர்மலா

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி: 6-30 9-30
விடுமுறைதினங்களில் 2 30.
சுந்தரராஜன் ஜெயலலிதா
நடித்த
மேஜர் சந்திரகாந்த்

தேவை
அதிகம் விற்பனையாகும் மருந்துச் சாமான்களுக்கு ஓடர்சேகரிப்பதற்கு பிணைப் பணம் கட்டக்கூடிய ஒருவர் தேவை. நேரில் வரவும்.
1282


# "நாட்டியம் தமிழர்களுக்கு சொந்தமான தனிக்கலை"

## பிரதமர் டட்லி, அண்ணா ஆசிச்செய்தி

யாழ்ப்பாணம், புதன்
நாட்டியம் தமிழர்களுக்குச் சொந்தமான ஒரு தனிக்கலை. அவர்கள் வாழுமிடமெல்லாம் இது தனித்துவம் பெற்று நிற்கும். பாரத நாட்டில் பரதம் பயின்று பட்டம் பெற்ற பலர் இன்று ஈழத்தில் இருக்கிறார்கள். இவர்கள் முயற்சியால் ஈழத்தில் சிறந்த நடனக் கல்லூரிகள் உருவாக்கினால் நமது கலைகள் நன்கு வளர முடியும்.'

தமிழக முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரை அகில இலங்கை இளம் நடிகர் சங்கத்தின் நாட்டிய விழாவையொட்டி அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இளைஞர்களின் ஆர்வமும், விடாமுயற்சியும் தொடர்ந்திருந்தால் நம் நாட்டுக் கலைகள் நன்கு வளர்ச்சியடையும் என்பதில் ஐயமில்லையென, பிரதமர் டட்லி சேனநாயகா அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் வேர்ணன் அபயசேகரா அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் "இப்படிப்பட்ட கலைவிழாக்கள் நடப்பதால் எமது நாட்டு மக்களின் கலாவல்லமை வெளிப்படுமென்று கூறியுள்ளார்.

யாழ்ப்பாண நகர மண்டபத்தில் இன்றுமாலை திரு. க. சொர்ணலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நாட்டிய விழாவில், உள்ளூராட்சி மந்திரி திரு. எம். திருச்செல்வம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் குத்துவிளக்கு ஏற்றிவைப்பார்.

# "சிறுபான்மையினரின் மொழிக்கு ரஷ்யாவில் சர்வகலாசாலை"

## உடுவில் எம். பி. தகவல்

யாழ்ப்பாணம், புதன்
இலங்கையில் தேசியமயம் என்ற போர்வையில் ஒரு தேசியஇனம் அடக்கி ஒடுக்கப்படுகின்றது. ஆனால் ரஷ்யாவிலோ புரட்சிக்கு முன்னர் தனக்கென ஒரு லிபிகூட இல்லாத 'கஸா' மொழியை சோவியத் அரசாங்கம் வளர்த்து, சர்வகலாசாலையொன்றையும் அம்மொழிக்கென அமைத்துக்கொடுத்துள்ளது.'

இலங்கை சோவியத் நட்புறவுச்சங்க யாழ்ப்பாணக் கிளைக்கூட்டத்தில் உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார். நல்லூரிலுள்ள கிளைக்காரியாலயத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு. எஸ். தனபாலசிங்கம் தலைமை வகித்தார்.

[2-ம் பக்கம் பார்க்க]

## தடைகளை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலெக் அபயகுணவர்த்தனவுக்கு அறிக்கை சமர்ப்பித்திருந்தார். திரு. அலெக் அபயகுணவர்த்தன இதுசம்பந்தமாகப் பிரதமருடன் கலந்தாலோசித்தார். இதைத் தொடர்ந்து பிரதமர் பார்லிமெண்டில் மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவில் நிலைமை பற்றி கூறினார்.

நாளை யாழ்ப்பாணத்தில் நடைபெறும் ஆலயப் பிரவேசம் சம்பந்தமான மகாநாட்டில் வடபகுதி பொலிஸ் அதிபர் அட்டோர்னி ஜெனரல் தெரிவித்த கருத்தை வெளியிடுவார் என அறியப்படுகிறது.

சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புச்சட்டம் வந்தபின்னர் முதல் முதலாக மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலிலே தடைபோடப்பட்டு வணங்கச் சென்ற ஹரிஜனர்கள் தடுக்கப்பட்டதாகவும், இதைத்தொடர்ந்தே இச்சட்டம்பற்றி பிரதமர் அட்டோர்னி ஜெனரலுடன் கலந்தாலோசிக்க வேண்டிய நிலைமை உருவானதென்றும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சமயவிஷயங்களில் பொலிஸார் அவசியமின்றி தலையிடாத நிலைமை இந்தப் பெரியார்கள் ஏற்படுத்த வேண்டுமெனவும் திறந்த மனதுடன் நடந்துகொண்டு பிரச்னைகளுக்கு சுமுகமான தீர்வுகாண முன்வரவேண்டுமெனவும் இவ்விதம் அவர்கள் முன்வருவார்களென்று தாம் நம்புவதாகவும் பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளனர்.

நாளை யாழ்ப்பாணத்தில் நடைபெறும் ஆலயப்பிரவேசம் சம்பந்தமான மகாநாட்டில் சமூக குறைபாட்டு ஒழிப்புச் சட்டத்தில் திருத்தங்களை சிலர் கொண்டுவர விரும்புவதாகவும் தெரிகிறது.

## கொட்டில்கள் தீக்கிரை

வவுனியா, செவ்.
முன்னாள் வவுனியா எம். பி. யான திரு. சி. சுந்தரலிங்கத்தின் வவுனியாவிலுள்ள இல்லத்துக்கு முன்னால் தொழிலாளருக்கென அமைக்கப்பட்டிருந்த கொட்டில்கள் நேற்றிரவு தீக்கிரையாகின. இதுபற்றி வவுனியா பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## சின்னமடு மாதா திருநாள்

ஊர்காவற்றுறை, புதன்
சின்னமடு செபமாலை கோவிலில் 5-ம்திருநாளான இன்று மாலை 7 மணிக்கு செபமாலை திவ்விய வழிபூசை ஆசிர்வாதம் என்பன நடைபெறும்'

## இன்று

யாழ்ப்பாணம், புதன்
சுன்னாகம் மேற்கு நாகேஸ்வரி வித்தியாசாலைக்கு அண்மையிலுள்ள மைதானத்தில் இன்று மாலை திரு. சி. சண்முகவடிவேல் தலைமையில் கலைவிழா ஒன்று நடைபெறவிருக்கிறது.
உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் உட்பட பலர் சொற்பொழிவாற்றுவர். இரு நாடகங்களும் இடம்பெறும்.

## திருத்தங்கள் செய்யப்படும்

கொழும்பு, செவ்.
ஆலயங்களுக்குள் செல்பவர்களைத் தடைசெய்வோர் மீது உடனடி நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பொலிசாருக்கு இருக்கும் வகையில் சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புச்சட்டத்தில் திருத்தம் செய்யப்படவிருப்பதாக பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஜி. வி. பி. சமரசிங்க அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.


இப்பொழுது மக்கள் ஆதரவுடன்
வீறுநடை போடுகிறேன்
நான்
பிளாஸா (கொழும்பு) | மைலன் (கொழும்பு) | வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
இங்ஸ்லி (கொழும்பு) | விஜயா (மட்டுநகர்) | ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)
★ ரவிச்சந்திரன்
★ ஜெயலலிதா
மனோரமா-நாகேஷ்-முத்துராமன்
பேபி பத்மினி-மனோகர்
நடித்த
ஸ்ரீ விநாயகா பிக்சர்ஸ் நான்

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
கெபிட்டல்
(கொழும்பு)
★ ராஜ்கபூர்
★ ராஜேந்திரகுமார்
★ வைஜந்திமாலா
நடித்த
சங்கம்
(டெக்னிக் கலர்)


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் ... ஆண்டு ஜூலை மாதம் 31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org